ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஸு ஆவணிமீ பகுதி அ.

VOL. 2. *AUGUST & SEPTEMBER 1925.* No. 8.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

பயவேதாந்தவித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி எழுதுவது.

(103-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கத்தொடங்கி, முதலில், அது சுருதி, பாஞ்சராத்ரம், இதிஹாஸம் புராணங்கள், ஸ்மிருதிகள், ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகள், அவைகளை யநுஸரித்த பூர்வாசார்ய ஸூக்திகள், உபபத்தி, அநுஷ்டானம் என்னுமிவற்றால் ஸித்திக்கிறதென்று நிரூபிக்கலாகும்.

சுருதியில், கடவல்லியிலுள்ள த்வயோபநிஷத்தில் த்வயமென்னும் மந்த்ரசேஷத்தை விசதமாக ப்ரதிபாதிக்கிறபடியால் அதில் சொல்லப்பட்டிருக்கிற "சரணம் ப்ரபத்யே" என்ற வாக்யத்தால் சரணவரண ரூபமான ப்ரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே சுவேதாசுவதரோபநிஷத்தில், "யோப்ருஹ்மாணம் விததாதி பூர்வம்" என்று தொடங்கி, "முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே" என்னுமளவாக, யாவனொருவன் ப்ருஹ்மாவை முதலில் ஸ்ருஷ்டித்தானோ? யாவனொருவன் ப்ருஹ்மாவுக்கு வேதங்களை யுபதேசித்தானோ? அப்படிப்பட்ட ஸர்வேசுவரனை மோக்ஷத்தில் இச்சையுடைய நான் சரணமாக அடைகிறேன் என்று சரணமடைதலாகிய

பிரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுள் சரணமடையவேண்டும் என்று விதிக்கப்படாமலிருந்தபோதிலும், மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு, ஈசுவரனையே சரணமடைதலாகிய ப்ரபத்தி அநுஷ்டிக்கத்தக்கதாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், மோக்ஷத்தில் இச்சையுடையவன் அதற்கு ஸாதனமான ப்ரபத்தியை அநுஷ்டிக்க வேண்டும் என்னும் விதியானது அர்த்தத்தாலே ஸித்தித்திருக்கிறது.

இப்படியே அர்த்தவாதங்களிலும், மந்த்ரங்களிலும் விதிவாசகமான ஏவல்வினைமுதலிய கட்டளையிடும்சொற்க ளில்லாதிருந்தபோதிலும் விதி அர்த்தத்தால் ஸித்திக்குமென்பது பூர்விக ச[illegible]திரங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே, "தஸ்ம[illegible] வர்யம் ப்ரபந்நம் நப்ரதி ப்ரயச்சதி" என்கிற சுருதியிலும் ஸித்[illegible] நிர்த்தேசத்தால், (சித்தித்ததுபோல் வைத்துப்பேசும் பேச்[illegible] விதியில்லா திருக்கச்செய்தேயும் அது அர்த்தத்தால் ஸித்தித்[illegible]கிறது.

இன்னும் இவ்வளவி லமையாமல், "ஓம் இத்யாத்மாநம்யுஞ்ஜீத" என்பதில் 'யுஞ்ஜீத' என்னும் ஏவல்வினையான கட்டளைச்சொல்லாலே வெளிப்படையாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் 'யுஞ்ஜீத' என்று யோகத்தைச் சொல்லுகிற விது, ப்ரபத்தியை எவ்வாறு சொல்லுமெனில்? மேல் "தஸ்மாத் ந்யாஸமேஷாம்" என்று யோகபர்யாயமாக ந்யாஸத்தைச் சொல்லியிருப்பதால் ந்யாஸமென்பது பரந்யாஸமாகிய ப்ரபத்தியாகையால், இந்த யுஞ்ஜீத என்ற யோகசப்தமும் ப்ரபத்தியைச் சொல்லியதேயாம்.

இப்படியே "த்ர்யம்பகம்யஜாமஹே" என்கிற மந்த்ரமும் ப்ரபத்திபரமாக ஸர்வஜ்ஞஸம்ஹிதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், 'இச்சை' என்றும், 'ஜ்ஞப்தி' என்றும், 'க்ரியை' என்றும் சொல்லப்படுகிற மூன்றும் லோகத்துக்கு மாதாக்கள். இந்த மாதாக்களையுடைய ஜகத்துக்குப் ப்ரியனுயுள்ள ஸர்வேசுவரனிடத்தில், ஆத்மஹவிஸ்த்பாகமாகிற யாகத்தைச் செய்கிறோம். அந்த யாகத்தைச் செய்தபடியால் உர்வாருகத்தின் பழமானது தன்

னுடைய கட்டில்நின்றும் எப்படி எளிதாக விடுபடுகிறதோ அப்படியே நாமும் மிருத்யுவில்நின்றும் எளிதாக விடுபடுகிறோம்; என்ற பொருளுடையதாக ஆத்மஹவிஸ்த்யாகம் சொல்லப்பட்டிருப்பதால் அறியலாம்.

இப்படியே "அக்நேநயஸுபதாராயே" என்கிற மந்த்ரத்தாலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்.- உத்கிருஷ்டமான ஸ்தானத்தை அடைவிக்கிற ஸர்வேசுவர! உன்பொருட்டு, உன்னுடைய புத்தியாலே மேலானதாக நினைக்கப்படுகிற 'நம:' என்கிற உக்தியையுடைய ப்ரபத்தியைப் பண்ணுகிறோம். அப்படி ப்ரபத்திபண்ணிய எங்களை அர்ச்சிராதிமார்க்கத்தாலே மோக்ஷைசுவர்யத்தின்பொருட்டு நித்யவிபூதியிற் சேர்க்கவேணும்; இதற்குத் தடையாயிருந்துள்ள பாபத்தைப் போக்கவேணும் என்பதாம். இங்கு 'நம:' என்று ப்ரபத்தி ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதும் அறியலாம். இப்படியே "யஜ்ஞேந யஜ்ஞ மயஜந்ததேவா: தாநி தர்மாணி ப்ரதமாந்யாஸந்" என்கிற சுருதியால் யஜ்ஞஸாதனமான ஆத்மாவாலே யஜ்ஞரூபியான ஈசுவரனை தேவர்கள் யஜித்தார்கள்; அந்த தர்மங்களே முதன்மையான தர்மங்களாயின என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு "அயஜந்த" என்று கிரியையாகச் சொல்லப்பட்ட யாகமும் ப்ரபத்தியாமென்றறியத்தக்கது.

இப்படியே "அமிருதஸ்யைஷ ஸேது:" "யஸ்மிந்த்யௌ:" என்று சொல்லிக்கொண்டுபோய், "தமேவைகம் ஜாநத ஆத்மாநம்" "அந்யா வாசோவிமுஞ்சத" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்.-கீழ், ஸர்வாதாரனுகச் சொல்லப்பட்ட பரமாத்மா ஒருவனையே மோக்ஷத்துக்கு உபாயமென்று அறியுங்கள்; வேறு உபாயாந்தரங்களான வாக்குக்களை விட்டுவிடுங்கள்; என்பதாம். இதனால் உபாயாந்தரங்களைவிட்டு ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாகிற சரணாகதி சொல்லப்பட்டதாயிற்று.

இப்படியே "ஸந்தாம் ததேப்ருஹ்மணைஷ:" என்பதால் ஸர்வேசுவரனோடே அவிவாத ரூபமாயுள்ள ப்ரபத்தியை யாவனொருவன் பண்ணுவானோ என்று வினவிக்கொண்டு, அவனுக்கு பலம் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாருக ப்ரபத்தியைப் பற்றிச்சொல்லும் சுருதிகள் இன்னும் பலவுள்ளன. அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக்காட்டினுல் மிக விரியுமாகையால் இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு மற்றவற்றை ஆராய்வோம்.

இனி ஸ்ரீபாஞ்சராத்ரத்தில், லக்ஷ்மீதந்த்ரம் அஹிர்புத்நிய ஸம்ஹிதை முதலியவற்றுள் நன்ருக விரித்துச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளில் விளங்கக்காணலாம். அப்படியே ருக்வேதத்தில் நின்றும் பிரிந்ததான ஜிதந்தேஸ்தோத்ரத்திலும் ப்ரபத்தி விஷயமான நிரூபணங்கள் கண்டுகொள்ளலாம்.

"வேதவேத்யேபரேபும்ஸி" என்கிற சுலோகத்தின்படி வேதத்தின் ப்ராதுர்ப்பாவ விசேஷமான ஸ்ரீராமாயணத்தில் ஆதிமுதல் அந்தமளவும் ப்ரபத்தி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலாவது பாலகாண்டத்தில் தேவதைகள் ராவணவதத்தின்பொருட்டு ஸர்வேசுவரன்விஷயத்தில் ப்ரபத்திபண்ணினதாகச் சொல்லப்பட்டது. அடுத்த அயோத்தியா காண்டத்தில் சித்ரகூடத்தில் பரதாழ்வான் "சேஷ்யேபுரஸ்தாச்சாலாயா:" என்று பெருமாள் அயோத்தியைக்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரபத்திபண்ணியிருப்பது காணலாம்.

அடுத்த ஆரண்ய காண்டத்தில், "தேவயம்பவதா ரக்ஷ்யா: கர்ப்பபூதா ஸ்தபோதநா:" என்கிற இடத்தில் "கர்ப்பபூதா:' என்பதினுல் தம்முடைய ரக்ஷணத்தில் தங்களுக்கு யோக்யதையில்லை யென்பதையும், தெரிவித்துக்கொண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறபடியால், ஆகிஞ்சிந்யத்தைமுன்னிட்டுருஷிகள் ரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணியிருக்கிறபடியாலும், அடுத்த கிஷ்கிந்தா காண்டத்தில், "க்ருதாபராதஸ்யஹிதே" என்கிற சுலோகத்தில் மஹாராஜனைப் பார்த்துத் திருவடி, தீரக்கழிய அபராதம்பண்ணின உமக்கு இளையபெருமாள் விஷயத்தில் அஞ்சலிரூபமான ப்ரபத்திபண்ணினுலொழிய வேறு வ்யாபாரமில்லையென்று சொல்லியிருப்பதாலும், ஸுந்தரகாண்டத்தில் பிராட்டி திருவடியினிடத்தில் அருளிச்செய்த காகவ்ருத்தாந்தத்தாலும், த்ரிஜடை பிராட்டி விஷயத்தில் ராக்ஷஸி

களை சரணாகதி பண்ணும்படி உபதேசித்திருப்பதாலும், யுத்தகாண்டத்தில் விபீஷணாழ்வான் பெருமாளிடத்தில் பண்ணின சரணாகதியை விஸ்தரித்து ப்ரதிபாதித்திருப்பதாலும் ஸ்ரீராமாயண முழுவதும் சரணாகதி ப்ரதிபாதகமாயிருப்பது கண்டுகொள்ளத்தக்கது.

இவ்விடத்தில் விபீஷண சரணாகதியில் சரணாகதிக்கு உரிய சில விஷயங்கள் தோன்றுகின்றன. அவை.-சரணாகதிக்குவேண்டிய ஆநுகூல்ய ஸங்கல்ப்பம், ப்ராதிகூல்யவர்ஜநம், ஆகிஞ்சந்யம், அநந்ய கதித்வம் என்னுமிவைகளாம். இவற்றுள் விபீஷணன் ராவணனுக்கு ஹிதோபதேசம் பண்ணினபடியாலும், ராமதூதனை திருவடியை ராவணன் கொல்லாதிருக்கும்படி விடுவித்தபடியாலும், 'ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் கரிஷ்யாமி" (ராக்ஷஸர்களை வதித்தற்கு உதவி செய்கிறேன்) என்று சொல்லியபடியாலும் ஆநுகூல்ய ஸங்கல்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. "பரித்யக்தாமயாலங்கா" என்றும், 'தோஸாப்யவமாநித:" என்றும், சொல்லியிருக்கிறபடியால் ப்ராதிகூல்யவர்ஜநம் ஏற்பட்டிருக்கிறது. 'ராவணோநாமதுர்வ்ருத்த:' என்று தனக்குள்ள நைச்யத்தை அநுஸந்திப்பதாலே ஆகிஞ்சந்யமும், 'சரண்யம்சரணம்கத:' என்பதாலே அநந்யகதித்வமும், சரணாகதியும் தோற்றுகின்றன.

ஆனால், 'ராஜ்யகாம்க்ஷீவிபீஷண:' என்றும், "ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து" என்றும் சொல்லுகிறபடியால் விபீஷணாழ்வானுடைய சரணாகதி ராஜ்யமடைதற்கன்றோ பண்ணப்பட்டதென்று விவாதிக்கலாகாது. ஏனெனில் அவன் சரணாகதி பண்ணுகிறகாலத்தில் "பரித்யக்தாமயாலங்கா மித்ராணிச தநாநிச, பவத்கதம்மே ராஜ்யஞ்ச" என்ற விபீஷணோக்தியாலே ராஜ்யத்தை யபேக்ஷித்ததாயில்லை; ப்ரேம பரவசரான மஹாராஜருடைய பயத்தைப் போக்குகைக்காக, "ராஜ்யகாம்க்ஷீவிபீஷண:" என்று பெருமாள்சொல்லியது ராஜநீதியைக்காட்டியபடி. ஆனல் பெருமாள் விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தைக் கொடுத்தது, ஆநுஷங்கிகமேயாம். பரதாழ்வானுக்கு ப்ரஜா பரிபாலனத்தை நியமித்தருளியதுபோலே, ராக்ஷஸர்களை பரிபாலிக்கும் பொருட்டே பெருமாள் விபீஷணாழ்வானுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தருளினர். இதை, "சாபிதஸ்த்வம் ஸகித்வேந கார்யந்தேமம சாஸ

னம், ப்ரஜாஸ்ஸம்ரக்ஷதர்மேண ரோத்தாம் வக்துமர்ஹஸி'' என்று பெருமாள் நிர்ப்பந்தித்து நியமித்தபடியா லறியலாம். அந்த நியமனத்தை மேற்கொண்டு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டது பகவதாஜ்ஞாநுவர்த்தனரூபமான கைங்கர்யமேயாம். இப்படியே பாரதத்திலும் "த்ரௌபத்யாஸ் ஸஹிதாஸ் ஸர்வே நம:சக்ருர் ஜநார்த்தநம்'' என்றும், "சங்கசக்ரகதாபாணே'' என்கிற சுலோகத்தில், "ரக்ஷமாம் சரணாகதாம்'' என்றும் சொல்லப்பட்டிருப்பதால் பாண்டவர்களும் த்ரௌபதியும் சரணாகதிபண்ணியிருப்பது விளங்குகிறது.

மேலும், கீதையில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று நேரே சரணாகதியை விதிவாசகமான வினைச்சொல்லால் ஸ்பஷ்டமாக விதித்திருப்பதும் கண்டுகொள்ளலாம்.

ஆனால் ஸ்ரீபாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில் ஸ்வதந்த்ரப்ரபத்திபரமாக அருளிச்செய்யாமல், அங்கப்ரபத்திபரமாக அருளிச்செய்திருப்பது கூடும்படி யெங்ஙனேயென்னில்; அவரே கத்யத்தில் பெரியபெருமாள் ஸந்நிதியில் ஸ்வதந்த்ரப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதாலும், அதற்கு ப்ரமாணமாக 'ஸர்வதர்மாந்' என்கிற சுலோகத்தை உதாகரித்திருப்பதாலும் கீதாபாஷ்யத்தில் அருளிச்செய்திருப்பது யோஜநாபேத பரமாகையால் இதுவும் உபபந்நமாம்.

ஸ்ரீ பாகவதத்திலும் ஏகாதச ஸ்கந்தத்தில், ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் உத்தவருக்கும் நடந்த ஸம்பாஷணத்தில் "தஸ்மாத்வம் உத்தவோத்ஸ்ருஜ்யசோதநாம் ப்ரதிசோதநாம்'' என்று உபாயாந்தரங்களைவிட்டுத் தன்னையே உபாயமாகப் பற்றவேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே மநுஸ்ம்ருதியில், "யமோவைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதிஸ்தித: தேநவேத விவாதஸ்தே மாகங்காம்மா குரூந்கம:'' என்று அவிவாதரூபமான ப்ரபத்தியைச் சொல்லியிருப்பதும் கண்டுகொள்ளலாம். இப்படியே மற்றுமுள்ள ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மேல் நிரூபணத்தில் அந்த ஸ்ம்ருதி வசனங்கள் உதஹரிக்கப்படும்.

(தொடரும்).

231

ஸ்ரீ,

தர்மம்.

(முதல்தொகுதியின் 106-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்மமானது சிறிது முன்னாகவேனும் பின்னாகவேனும் தன் பலனை அடைவிக்காம லிராதென்பது மேலே சொல்லப்பட்டது. இவ் விஷயத்தை நீதிநூலில் ஓர் உதாரணமுகத்தால் விளக்கிக் காட்டுவதுண்டு. தென்னை மரமொன்றை வித்திவிளைவிப்பதாக வைத்துக் கொள்வோம். அது நன்றாக வளர்ந்து பக்குவம் வாய்த்தபிறகு பலனைக் கொடுக்கின்றது. அவ்வாறே ஒருவன் வளர்க்கும் அறமாகிய பயிரும் தக்கபருவம்நிறைந்த உடனே அவனுக்குப் பயனளிக்குமென்பதில் ஐயமில்லை. ஒருவன் பிறனொருவனுக்கு நன்மையானதொரு காரியத்தைச் செய்யுங்கால், அந்த தர்மத்தின்பலன் தனக்கு எப்பொழுது கிடைக்குமோ என்பதை எதிர்பாராமலே செய்யக்கடவன். ஏனெனில் தர்மம் பலன் தருவதில் ஒருபொழுதும் தவறுவதில்லை. அவ்வாறு கொடுப்பதிலும் அது தன் முன்னையளவிலும் பன்மடங்கதிகமான பயனையே தருகின்றது. தென்னைமரம் தன் தாளினாலுட்கொண்ட உப்புநீருக்கு மாறாக இனிய இளநீரைத் தலையினாலளிக்குமன்றோ?

"நன்றியொருவர்க்குச்செய்தக்காலந்நன்றி
என்றுதருங்கொலெனவேண்டா—நின்று
தளராவளர்தெங்குதாளுண்டநீரைத்
தலையாலேதான்தருதலால்."

என்னும் ஆன்றோர் வாக்கினுள் இக்கருத்து அடங்கியிருத்தல் கண்டுகொள்க. ஆகவே ஒருவன் முன்னிலும் அதிகமான ஆக்கமடைந்து வாழ்வதற்கு அவன் செய்யும் தர்மமே காரணமாகுமென்பது மிகவும் வெளிப்படையாயிற்று. அதனாலேயே செல்வத்தினுங்காட்டில் தர்மம் சிறந்ததாக மதிக்கப்படுகிறது.

ஆயினும்,

"வடுவிலாவையத்துமன்னியமூன்றில்
நடுவணதெய்தஇருதலையுமெய்தும்,"

என்று நாலடியார் என்னும் நீதி நூல் கூறுகின்றது. இவ்வுலகத்திற் குரியனவாய் தர்மம், அர்த்தம், காமம் என்னும் புருஷார்த்தங்கள் மூன்றிலும் நடுவில்வைத்து எண்ணப்படுகிற பொருளை அடைபவருக்கு ஏனைய இரண்டும் எளிதினில் எய்தும் என்பதே அதன் கருத்து. இதனால் பொருளே மற்றையவற்றினுஞ் சிறந்ததென்பது பெறப்பட்டது. ஆகையால் இதுபோலுள்ள ப்ரமாணங்கள், மேல் அறமே சிறப்புடையதென்று கொண்ட கொள்கையை விரோதிப்பன போல் தோன்றும். அவ் விஷயத்தையும் இங்கே சிறிது விசாரிப்போம்.

நாலடியாரில் பொருளின் பெருமையொன்றே பேசவந்த இடத்தில், அது அறத்தினுஞ் சிறந்ததென்று ஒருவகையால் உயர்த்திச் சொல்லப்பட்டது. ஆனாலும் அறமாகிய உறுதிப்பொருள் முழுவதும் அர்த்தத்தினாலே அடைதற்குரியதென்பது ஸித்தித்துவிடாது. ஏனெனில் தர்மங்களனைத்தினும் மிகவும் மேலானவையாய் முனிவரிடத்துள்ள தவமும், மகளிரிடத்துள்ள கற்பும் பொருள்காரணமாகத் தோன்றுவனவன்றே? அன்றியும் அன்பு, அருள், வாய்மை, அடக்கம், பொறை, அஹிம்ஸை முதலாகப் பல பகுதிப்பட்ட அறங்களும் நிதியின் உதவியின்றியே நிகழ்வனவாயுள்ளன. அர்த்தத்தை அபேக்ஷித்து நடப்பன ஒப்புரவும் ஈகையும் முதலான ஒன்றிரண்டு தர்மங்களேயாகும். அவற்றிற்கும் அப்பொருள் எம்மட்டில் காரணமாகுமென்பதைச் சிறிது ஆழ்ந்து நோக்குவோம்.

ஒருவன் தானமுதலான தர்மங்களைச் செய்யும்பொழுது அதற்கேற்ற த்ரவ்ய சகாயம் வேண்டியிருப்பது மிகவும் உண்மையே. ஆயினும் அவன் பூர்வத்தில் செய்துபோந்த தர்மத்தின் பலனே அவ்வாறு பொருள்வடிவமாக அவனிடம் பொருந்தியுள்ளதென்பதை நன்கறிய வேண்டும். அன்னதானம் போன்ற அறங்களில் பொருளைச் செலவிடுவதானது, ஒருவன் அப்பொருள் பின்னர்த் தனக்கே உதவுமாறு சேமித்துவைப்பதே யாகும்.

"அற்றார்அழிபசிதீர்த்தல்அஃதொருவன்
பெற்றான்பொருள்வைப்புழி,"

என்றமையால் அதுவே நீதிநூலின் துணிபாதல் அறிந்துகொள்க. அன்றியும் அத்தகைய தர்மங்களைவளரச்செய்பவனுடைய க்ருஹத்தில், "அகனமர்ந்து செய்யாளுறையும்" என்கிறபடியே, திருமகள் மிகுந்த விருப்பத்தோடு வீற்றிருந்தருளுவள் என்பது முன்னரே ஒருமுறை சொல்லி முடிக்கப்பெற்றது. தன் செல்வமெல்லாம் நல்ல வழியிற் பயன்படுவதைப் பார்த்து அவள் மிகவும் மகிழ்ச்சியடைகிறாள் என்பதும் அங்கே குறிக்கப்பட்டது. இவற்றால், பொருட்செலவையே காரணமாகவுடைய சில தர்மங்களும், மேலும் மேலும் தமக்கு உபயோகமாகும்படி அப்பொருளை வ்ருத்தியாக்கிக் கொடுத்து, அதற்கே காரணமாயுள்ளன என்று தெளிவாகின்றது. ஆகையால் அவ்விடத்தில் தர்மத்திற்கு தர்மமே காரணமாயிற்றென்று சொல்லவேண்டும். அதாவது, ஒருவன் முன்பு செய்த தர்மமே அவன்மேன்மேலும்செய்யும் தர்மத்திற்கு சாதனமாகப் பொருளின் வடிவமாய் அவனிடம் வந்துள்ள தென்பதாம். ஆகவே அறத்திற்குப் பொருளைக் காரணமாகச் சொல்லுவதெல்லாம், அது ஒருவகையாற் காரணமாயிருப்பது பற்றியும், அதுவே வெளிப்படையாகத் தோன்றுவது பற்றியும் அல்லாமல் வேறன்று என்பது நன்கு பெறப்படும்.

அவ்வாறாயின், ஒருவன் பூர்வ ஜன்மத்தின் புண்யபலத்தாலன்றித் தன் மெய்முயற்சியாலே தேடிய பொருளைக்கொண்டு தர்மம் செய்யும்பொழுது, அப்பொருள்தானே அறத்திற்குக் காரணமாகிறது என்று சிலர் எண்ண இடமுண்டு. ஒருவன் செய்யும் நன்முயற்சிகளெல்லாம் விதிவிலக்குகளுக்கு உட்பட்டனவாகலின் அவை தர்மத்தைப் பின் பற்றியே செல்லுகின்றன. அவ்வாறு தர்மமார்க்கத்தால் தேடிய பொருளைக்கொண்டு அறம் செய்யும்போது அப்பொருள் தனித்து நின்று அறத்திற்குக் காரணமாகுமென்று சொல்லமுடியாது. தர்மத்தினின்றும் தனியே வேறு பிரித்தபொருளை ஒரு புருஷார்த்தமாகவே நீதிநூல்கள் உடன்படவில்லை. பொருளாகிய புருஷார்த்தம் இன்னதென்பதைத் தெளிவாக விளக்கவந்த இடத்தில், "தீவினைவிட்டு ஈட்டல் பொருள்" என்று சொல்லப்பட்டது. தீவினைவிட்டு ஈட்டலாவது, தர்மவழியிலேயே சம்பாதித்தலாம்.

அல்லாத வழியில் தேடும்பொருள் புருஷார்த்தமாகாது. அப்பொருளின் ப்ரயோஜனங்களும் அநிஷ்டமாகவேமுடியும். ஆகவே, அறத்தோடு கலவாமல் அர்த்தம் தனியே நிலைபெறுவதில்லை என்று இதுவரை சொல்லிய விஷயத்தினால், . தர்மமே பொருளினுஞ் சிறந்ததென்பது விசதமாகத் தோன்றும்.

இனி, மூன்றாவதான காமபுருஷார்த்தமும் தர்மத்தினாலே அடையக்கூடியதென்பது சொல்லாமலே விளங்கும். அறத்தினால் பொருளும் அப்பொருளினால் போகமும் உண்டாவது நிராக்ஷேபமாய் ஒப்புக்கொள்ளத்தக்கதன்றோ? ஆகவே தர்மம், அர்த்தத்திற்கு ஸாதனமாயுள்ள நிலையில் எவ்வாறு அதனினும் சீரியதாக மதிக்கப்பட்டதோ அவ்வாறே காமத்திற்கும் ஸாதனமாயுள்ள நிலைமையில், அக்காமத்தினும் சீரியதாக மதித்தற்குரியதென்பது வெளிப்படை.

அவ்வாறாயினும், ஸாத்யத்தை உத்தேசித்தே ஸாதனங்கள் தோன்றுகின்றனவாகையால், ஸாதனமாகிய தர்மத்தினும் ஸாத்யமாகிய காமமே உயர்ந்ததென்று கொள்ளுதல் கூடாதோ எனின் கூடாது. ஸாதன ஸாத்யங்களாகிற இரண்டில் சில இடங்களில் ஸாதனமே பெருமையுடையதாவதும் உண்டு. சில இடங்களில் ஸாத்யமே பெருமையுடையதாவதும் உண்டு, அவ்விரண்டுவகைகளிலும், இங்கே தர்மத்தை ஸாதனமாகச் சொன்னது முன்னையதனோடு ஒக்கும். ஏனெனில், ஸாதனமாகிய தர்மம் மிகப் பெரிதாயும், ஸாத்யமாகியகாமம் அதனில் ஏகதேசமாய் மிகச்சிறிதாயும் இருக்கின்றன. தெளிவாகச் சொல்லுமிடத்து, தர்மம் வ்யாபகமாகவும் காமம் அதில் வ்யாப்யமாகவும் உள்ளது என்னலாம். எங்ஙனமெனில் இன்பம் ஒன்றையே பெறுதற்பொருட்டு அறம் ஸாதனமாய்த் தோன்றுகிறதென்று சொல்லமுடியாது. தர்மம் தன்மட்டிலேயே ஓர் உயர்ந்த உறுதிப்பொருளாக இருத்தலோடு பொருளும், இன்பமும், வீடும் ஆகிய பிற புருஷார்த்தங்களையும் அடைவிக்கின்றது. ஆகையால், மற்றைஉறுதிப்பொருள் மூன்றிற்கும் ஸாதனமாய் அவற்றைத்தன்னுள் அடக்கியுள்ளதாகிய அறமானது அப்புருஷார்த்தங்களில் ஏகதேசமான காமத்தினும் தாழ்ந்ததென்று சொல்லுதல் எவ்வாறு பொருந்தும்?

அதுவன்றியும், விதிவிலக்குகளுக்குக் கட்டுப்பட்டு அனுபவிக்கும் இன்பமே காமமாகிய புருஷார்த்தமாகக் கருதப்படுகிறது. அதாவது அறத்துடன் கூடிவரும் இன்பமே உறுதிப்பொருளாகும் என்பதாம். அதனை,

"அறத்தான்வருவதேஇன்பம்மற்றெல்லாம்
புறத்தபுகழுமில"

என்றும் தெய்வப்புலவர் திருவாக்காலறிக. அறத்தினின்றும் வழுவி ஒருவன் காமத்தை நுகர்வானாயின் அது இன்பமாகாது, துன்பமேயாம். பிறனில்விழைதல் (பரதார பரிக்ரஹம்) முதலான அக்ருத்யங்களாலும் போகநுகர்தல்கூடும். ஆயினும் அவை அறத்தின்வழி வந்தன அல்லவாதலால் த்யாஜ்யங்களேயாகும். அத்தகைய காமம் ஒருக்ஷணமாத்ரம் இன்பம்போலத் தோன்றினாலும், பின்பு பாபத்திற்கே காரணமாய் அளவில்லாத துன்பத்தை விளைவிக்குமென்று அறியவேண்டும். இம்மையிலும் அது ஒருவனுடைய புகழ்முழுவதையும் அழித்துப் பழியையே நிற்கச்செய்கிறது. ஆதலால் அறிந்தோர் அதனை ஓர் உறுதிப்பொருளாகக் கொள்வதில்லை. ஆகவே இதனாலும் தர்மமானது காமத்தினும் மேலானதென்று ஸித்திக்கிறது.

இதுவரை சொல்லிய விஷயங்களால் தர்மம், அர்த்த காமங்களை அடைவதற்கு ஸாதனமாயுள்ளதென்றும், அவை புருஷார்த்தங்களாக நிலைபெறுமாறு அவற்றுடன் கலந்து நிற்கிறதென்றும், அவற்றைத் தன்னகத் தடக்கித் தான் வ்யாபகமாயுள்ள தன்மையால் அவற்றினும் மிகப் பெருமை வாய்ந்ததென்றும் விளங்கிக்கிடத்தல் கண்டுகொள்க. இவ்வாறு பொருளின்பங்கள் அறத்தின் வழிப்பட்டு நிற்குமியல்பு ஓர் அருமையான சங்கப்பாடலிலும் பயின்றுள்ளதென்பதை இங்கே எடுத்துக்காட்டுதல் மிகையாகாது. சோழ அரசன் ஒருவனுடைய கொற்றக் குடையினைச் சிறப்பிக்கும் கருத்துடன் ஒரு புலவர்,

"சிறப்புடைமரபிற்பொருளுமின்பமும்
அறத்துவழிப்படூஉம்தோற்றம்போல
இருகுடைபின்படஓங்கியஒருகுடை
உருகெழுமதியின்நிவந்துசேண்விளங்க"

என்று கூறுகின்றார். ஏனைச் சோபாண்டியர்களுடைய குடைகளிரண்டும் சோழனுடைய கொற்றக் குடை ஒன்றன் நிழலின் கீழ்ப்பட்டு அதனை அநுவர்த்தித்துச் செல்லுகின்றன என்னும் அபிப்ராயம், பொருளும் இன்பமும் ஆகிய உறுதிப்பொருள்கள் இரண்டும் அறமாகிய ஒன்றில் வ்யாப்யமாய் அதனைப் பின்பற்றியே நடைபெறுகின்றன என்னும் உபமானத்தால் விளக்கப்படுகிறது. இங்ஙனம் தமிழ்வேந்தர் மூவரில் சோழன் ப்ரபலனுயிருந்த தன்மைக்கு, ஐஹிக புருஷார்த்தங்கள் மூன்றில் தர்மம் வ்யாபகமாயிருக்கும் இயல்பை உவமைகூறி யிருப்பதன் நயம் பெரிதும் பாராட்டத்தக்கது. அது ஒருபுறமிருக்க.

ஏனைப் பொருளின்பங்களுக்குச் சாதனமாயிருத்தலே யன்றி அறம் (தன் மட்டில்) ஸ்வயமாகவே ஒரு உயர்ந்த புருஷார்த்தமாகவுள்ளது என்று மேலே சொல்லிய விஷயம் இனிச் சிறிது விஸ்தரித்து எழுதப்பெறும்.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்.

ஸ்ரீ:

ததீய சேஷத்வம்.

ததீய சேஷத்வமாவது:— எம்பெருமானுடைய அடியவர்களுக்கு அடிமையாயிருத்தலாம். ஆத்மாவுக்கு உண்மையான நிலையாவது:- ஸர்வேசுவரனுக்கு அடிமையாயிருப்பதே. இதுபற்றியே லோகதேசிகனும் "மணத்தையும், ஒளியைபுங்கொண்டு பூவையும் ரத்னத்தையும் விரும்புமாபோல சேஷ

மென்று ஆத்மாவையாதரிக்கிறது; அதில்லாதபோது *'உயிரினற் குறைவிலம்' என்கிறபடியே த்பாஜ்யம்" என்று அருளிச்செய்தார். இந்த அடிமை அவனடியாரளவுமானலொழிய பூர்த்தி பெறுவதில்லை. ஆகையாலன்றே சக்ரவர்த்தி திருமகன் தன்னைத்தஞ்சமாகவடைந்த ஸ்ரீவிபீஷணாழ்வானை அடிமைகொள்ளுகிற காலத்தில் 'இவன் சேஷத்வபூர்த்திபெறவேண்டும்' என்று மஹாராஜரை (சுக்ரீவனை)க் கொண்டு அழைத்து வரும்படி செய்தார். ததீய சேஷத்வத்தாலே தான் சேஷத்வஸித்தியுண்டு என்பதற்கு அழகியமணவாளப்பெருமாள்நாயனர் "பகவத் சேஷத்வத்தளவிலே நின்றல் மீளச் சங்கையுண்டு; பாகவத சேஷத்வத்தளவுஞ் சென்றல் மீளப்போகாதே உகப்பாலேவருமதாகையால். ஒரு க்ஷேத்ராம் பத்தெட்டுக்கிரையஞ் சென்றல் மீளவிரகில்லை" என்று அருளிச்செய்தார். இதுவும் இங்குக்கருதத்தக்கதே.

இது நிற்க, திருப்பாணாழ்வாரைப் பெரிய பெருமாள் அடிமை கொள்ளுகிற காலத்தில் லோகசாரங்கமாமுனிவரைக்கொண்டு

---

*"உடம்பினற்குறைவில்லாவுயிர்பிரிந்தமலைத்துண்டம்
கிடந்தனபோற்றுணிபலவாவசுரர்குழாந்துணித்துகந்த
தடம்புனலசடைமுடியன்தனியொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான்கவாாதவுயிரினற்குறைவிலமே"

இது, ஆழ்வார் பக்தியின் மிகுதியால் கேட்டார்ரெல்லாம் உருகும்படி எம்பெருமானை அழைத்தார். இவர் இப்படி அழைத்த விடத்திலும் எம்பெருமான் இவருக்கு முகங்காட்டாதொழிந்தான். இதைக் குறித்து 'இவன் நம்மை உபேக்ஷித்துவிட்டான்' என்று கருதி அவன் விரும்பாத உடம்பு, உயிர்முதலியவற்றல் யான் ஒருதுறைவுடையேனயிருக்கின்றேனில்லை என்று தலைமகள் பேசுவதாகச் சொல்லப்படுகிற "எருளுமிறையோனும்" என்ற திருவாய்மொழியிலுள்ளது. இதன்பொருள்:— தேகபோஷணத்தால் பெருத்த சரீரத்தையுடைய அசுரக்கூட்டத்தை ப்ராணனேடு சஞ்சரித்துத்திரிந்த பர்வதங்கள், இந்திரன் வச்ராயுதத்தால் பலகூறுகத்துணிபட்டுக் கிடந்தனபோல் பல துண்டமாம்படி துணித்து மகிழ்வுற்ற,மிக்க நீரை ஜடைமுடியிற் கொண்டுள்ள சிவன் ஒரு பக்கத்தில் வசிக்கின்ற திருமேனியையுடைய ஸர்வேசுவரன் விரும்பாத உயிரினல் ஒரு பிரயோஜனமுடையேனல்லேன். என்பதாம்.

அழைத்து வரும்படிசெய்து அடிமை கொண்டார். ஆகையாலன்றோ திருப்பாணாழ்வார் முதலில் பாசுரமருளிச் செய்கிறகாலத்தில் பெரிய பெருமாள் தம் விஷயத்திற் செய்த நன்றி புலப்பட "அமலனாதி பிரானடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்..." என்றார். இன்னும் 'ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளும் செய்யப் பெறுவேனாகவும்' என்ற தாத்பர்யத்தைக் கொண்டுள்ள திருமந்த்ரத்தில் நம:பதார்த்தம் அருளிச்செய்கிற விடத்தில் "இதிலே பாகவத சேஷத்வம் அநுஸந்தேயம்" என்று லோகதேசிகன் அருளிச் செய்தார்.

ஸர்வேசுவரன் 'மயர்வறமதிநலம்' அருளப்பெற்ற காலத்தில், *திருமங்கையாழ்வார் "நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்று ஒருகால் உரைத்ததை ஒன்பதின்காலும் பாராட்டிப் பேசிச்சென்றார். பின் இந்த நாராயணநாமத்தில் முக்யமாயறியத்தக்க விஷயத்தைக் கூறவந்தவிடத்தில்,

"மற்றுமோர்தெய்வமுளதென் றிருப்பாரோ
டுற்றிலேன்உற்றதுமுன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம்பேசிலும்நின் திருவெட்டெழுத்தும்
கற்றுநான்கண்ணபுரத்துறையம்மானே"

என்று அருளிச்செய்தார். இது திருமங்கையாழ்வாரும், திருக் திருக்கண்ணபுரத்தெம்பெருமானும் ஒருவரை ஒருவர் வினவிக் கொண்டதாகப் பொருளுணரக்கிடக்கிறது. அஃதாவது:—

*இதரவிஷயங்களில் உகந்தோடித்திரிந்த திருமங்கையாழ்வாரை அங்கீகரிக்கத் திருவுள்ளம்பற்றிய ஸர்வேசுவரன், பெரிய பிராட்டியாரோடு ஸர்வாபரணபூஷிதனாய் இவர் வழிப்பறி செய்து திரிகின்ற விடத்திற்கு வர இவர், அவர்களை வளைத்துக்கொண்டு அவர்களணிந்த எல்லா ஆபரணங்களையுங்கழற்றி ஓரிடத்தில்வைத்துப் பின் அவற்றை எடுத்துச்செல்ல முயன்றவளவில் அவை வாராதொழிந்தன. இது கண்டு 'இவன் மந்த்ரவாதஞ் செய்தான்'. என்று தம் வாளைக்காட்டி இந்த மந்த்ரத்தைச் சொல்லென்று கேட்டார். அப்பொழுது ஸர்வேசுவரன் இவருக்குத் திருமந்த்ரத்தை உபதேசித்தான். உடனே இவருக்கு ஜ்ஞாநமுண்டாகப் பெற்றுத் தாம் முன்னிருந்த நிலைமையையும், தற்பொழுது பெற்றபேற்றையும் குறித்து "வாடினேன் வாடி"என்று பாடினார். இதுவே இவருக்குமயர்வறமதி நலமருளப் பெற்றகாலமாம்.

திருமங்கை—திருக்கண்ணபுறத்துறையம்மானே! நான் உன்னைக் காட்டிலும் பிற தெய்வமுண்டென்றிருக்கும் தாமஸ குணமுடையாரது உறவற்றிருப்பதோடு உன்னளவிலும் நில்லாது உன்னடியார்க்கடிமை பூண்டுள்ளேன்.

கண்ண— ஆழ்வீர்! நீர் இவ்வநுஷ்டாநம் எங்கே யார் சொல்லக் கற்றீர்?

திருமங்— நான் முன் வாள்வலிகாட்டி உம்மிடத்தில் கற்றுக் கொண்ட தன்றோ!

கண்ண— எம்மிடத்திற் கற்றுக்கொண்ட தென்ன?

திருமங்— நாராயணுவென்ற நாமம்.

கண்ண— இதற்கு அர்த்தம் இது தானே?

திருமங்— அடியேன் உம்மடியார் திறத்து அடிமைபூண்டு நிற்பதேதான் இதற்கு முக்யப்பொருளாமென்று அறுதியிட்டிருக்கிறேன்.

கண்ண— இஃதோர் அர்த்தமாத்ரந்தான். உம் நெஞ்சிற்பட்டிருக்கிறதோ?

திருமங்— இது, வேறுபல வர்த்தங்களைச் சொல்லுமோ?

கண்ண— சொல்லும்.

திருமங்— அவை எவை?

கண்ண— இந்தத் திருமந்த்ரமானது, ஜீவாத்மஸ்வரூபத்தையும், எமது ஸ்வரூபத்தையும், ஆத்மவஸ்துக்களுக்கும் எமக்குமுள்ள ஸம்பந்தத்தையும்,எம்விஷயத்திற் செய்யும் கைங்கர்யத்தையும் சொல்லும்.

திருமங்— நீர் உரைத்தபடி இது “மற்றெல்லாம் பேசிலும் நான் நின்திருவெட்டெழுத்துங் கற்று உற்றது உன்னடியார்க்கடிமை”. என்றார்.

பின் திருக்கண்ணபுரத் தெம்பெருமான் திருமங்கையாழ்வார் ததீய சேஷத்வத்தில் ஊன்றி நின்றதற்கு மகிழ்வுற்றான். இது நிற்க, திருமங்கை யாழ்வார் 'தானுகந்தவூரெல்லாம் தன்தாள்பாடி' என்றபடி எம்பெருமான் உகந்தருளி எழுந்தருளியிருக்கிற திவ்ய தேசங்களிற்சென்று மங்களாசாஸநம் செய்து வருகிறகாலத்தில் திரு நறையூர் நம்பியின்வடிவழகில் ஈடுபட்டுப்பரவசராய், "நம்பிதன்நல்லமாமலர்ச்சேவடிசென்னியிற், சூடியுந்தொழுதும்.........." என்று அருளிச்செய்ய நம்பி இவரைக்கடாக்ஷித்து 'இவர் நம் திருவடியின்வாசி யறிந்தவராயிருக்கிறார்' என்று ஆழ்வீர்! நீர் நம்முடைய திருச்சேறைக்கு வந்தால் உம்முடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைக்கிறோம் என்றான். இவரும் திருச்சேற்றை எழுந்தருளி மாமதலைப்பிரானைச் சேவித்து,

> "கண்சோரவெங்குருதிவந்திழியவெந்தழல்போல்கூந்தலாளை
> மண்சோரமுலையுண்டமாமதலாய்வானவர்தங்கோவே........."

என்று அருளிச்செய்தவளவிலே மாமதலைப்பிரான் தன்னுடைய திருவடிகளைக்கொண்டு இவர் திருமுடியிலே வைக்கவர இவற்றைப் புறங்கையாலே தட்டி 'நின்பொது நின்ற பொன்னங்கழலையோ என் தலைமேலிருக்கக் கருதினேன் என்றார்.

மாமதலைப்பிரான்— வேறுயாதுகருதினீர்?

திருமங்— "உன்தாள் தொழுவார்காண்மி னென்றலைமேலார்" என்று கருதியுள்ளேன்

மாமத— உமக்கு நாம் அந்தர்யாமியாயிருக்கின்றோமே?

திருமங்— "உன்தாள்தொழுவார்எப்பொழுதும்என்மனத்தேயிருக்கின்றாரே"

மாமத— நாம் உமக்கு அர்ச்சாவதாரமாயிருந்து சுலபமாய் ஸேவைசாதிக்கின்றோமே?

திருமங்— "கடன்மல்லைத் தலசயனத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள்குல தெய்வமே" என்றபடி உம்மைத் துதிக்கின்ற அடியாரைக்குல தெய்வ

மாகக் கொண்டுளேன். அவர்களும் எனக்குச் சுலப ரன்றோ!

மாமத— அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?

திருமங்— "போதோடுபுனல்தூவும்புண்ணியரேவிண்ணவரில் பொலிகின்றாரே"

மாமத— கண்களாரக்கண்'டநுபவிப்பதற்கும், நெஞ்சால் அநு ஸந்திப்பதற்கும் நாம் வேண்டுமே?

திருமங்— "வண்சேறைபெம்பெருமானடியார்தம்மைக்கண்டே னுக்கிது காணீ ரென்னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்கு மாறு" என்றபடி உன்னடியாரைக்கண்டு என் கண் களும் நெஞ்சும் களிக்கின்றன.

மாமத— உமக்கினிமையாயிருப்பதற்கு "ஸர்வகந்த ஸர்வரஸ"னா யிருக்கிற நாம் வேண்டுமே?

திருமங்— எம்பெருமான் தாளைச் சிந்திப்பார்க் கென் னுள்ளந் தேனூறி யெப்பொழுதுந் தித்திக்குமே" என்றபடி உன்னடியாரை நினைத்து என்னுள்ளங் களிப்படை கிறது.

மாமத— நீர் உபாயோபேயமாகப் பற்றுகைக்கு நாம் வேண்டுமே?

திருமங்— ததீயர்கள், *உபாயத்திற்கு முற்பாடராயும், †உபேயத் திற்கு எல்லை நிலமாயும், இருக்கும் நாளிற்கு உசாத் துணையாயுமிருக்கின்றாராதலால் "பேராளன் பேரோ தும் பெரியாரை யொருகாலும் பிரிகிலேனே"

மாமத— நீர் முதலில் "நின்னடியிணையடைந்தேன்" என்றும், "நாயேன் வந்தடைந்தேன்" என்றும், "அடியேனை

---

* உபாயமாவது:-விரும்பியபயனடைதற்குச் சாதனமாயிருப்பது. பல ஸித்திக்குப் புருஷகாரபூதராய் முற்படுமவர்கள் ததீயர்களாதலால் உபாயத் திற்கு முற்பட்டாரென்று சொல்லப்பட்டது.

† உபேயமாவது:-விரும்பியடையும் பயனாயிருப்பது. ததீயாளவும் செய் யும் கைங்கர்யத்தாலே பலபூர்த்தி யுண்டாமாதலால்; உபேயத்திற் கெல்லைநில மாய் என்று சொல்லப்பட்டது.

யாட்கொண்டருளே" என்றும் எமக்கு அடியவரா யன்றோ புகுந்தீர்?

திருமங்— ஒருவனைக் கவிபாடுகின்ற கவிஞன், அவனுடைய ஊர், பேர், தார், (மாலை) குடி முதலியவற்றை விசேஷணமாக வைத்துக் கவிபாடுவதுபோல யானும் ததீயரை உத்தேசியமாகப்பற்றி நீர் அவர்களால் உகந்துபோற்றப்படும் உபாய வஸ்துவாயும், பரதெய்வமாயு மிருக்கின்றீராதலால்; உம்மை விசேஷணமாக வைத்துச் சொன்னேனேயன்றிப் பிறிதில்லை.

மாமத— நம்மைப் பிரித்துச் சொன்னீரே?

திருமங்— உம்மை நான் பிரித்துச் சொல்லவில்லை. "ஜ்ஞானீத்வாத்மைவமேமதம்" (ஜ்ஞாநியே எனக்குயிராவானென்பது எனது கொள்கை) என்று சொல்லிவைத்தீரே இதனால் நீர் அவர்களுடைய திவ்யமங்கள விக்ரஹமாகின்றீர். அப்படியிருக்கப் பிரித்துச் சொன்னதாகக் கருதியது முறையில்லையே?

மாமத— அப்படியானால் ததீயவிஷயத்தில் முக்ய நோக்குடையவராகிய நீர் எம்மையுந் துதித்தீராதால் உம்மிடத்திற் குற்றம்வந்து சேருமே; இதற்கென்செய்விர்?

திருமங்— பர்த்தாவின் தேஹத்தை விரும்பின பதிவ்ரதைக்குக் குற்றமுண்டானாலன்றோ உம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை விரும்பிய எனக்குக் குற்றமுண்டாகும் என்றார்.

இதன்மேலும் பதில் சொல்லுதற்கு முடியாத மாமதலைப்பிரான் 'நாம் இவருக்குத் தோற்றோம்' என்று. இவர் விஷயத்தில் மிகவும் உகப்புற்றிருந்தான். இது நிற்க, நம்மாழ்வாரும்

"ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி
வழுவிலாவடிமைசெய்யவேண்டும்நாம்
தெழிகுரலருவித்திருவேங்கடத்து
எழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே"

என்ற திருவாய்மொழியில் ஸர்வேசுவரன் விஷயமான அடிமைத் தொழிலை விரும்பினார்.

"புகழுநல்பொருவனென்கோபொருவில்சீர்ப்பூமியென்கோ
திகழுந்தண்பரவையென்கோதீயென்கோவாயுவென்கோ
நிகழுமாகாசமென்கோநீள்சுடரிரண்டுமென்கோ
இகழ்விலிவ்வனைத்துமென்கோகண்ணனைக்கூவுமாறே"

என்ற இதில் வாசிக கைங்கர்யத்தில் ஈடுபட்டார்.

"மொய்ம்மாம்பூம்பொழில்பொய்கைமுதலைச்சிறைபட்டுநின்ற
கைமாவுக்கருள்செய்தகார்முகில்போல்வண்ணன்கண்ணன்
எம்மானைச்சொல்லிப்பாடியெழுந்தும்பறந்தும்துள்ளாதார்
தம்மால்கருமமென்சொல்லீர்தண்கடல்வட்டத்துள்ளீரே"

என்ற இதில் எம்பெருமான் விஷயமான கைங்கர்யத்தில் ஈடுபடாத வரை வெறுத்துரைத்தார்.

"செய்யதாமரைக்கண்ணனுயுலகேழுமுண்டவன்கண்டீர்
வையம்வானம்மனிசர்தெய்வம்மற்றும்மற்றும்மற்றுமுற்றுமாய்
செய்யசூழ்சுடர்ஞானமாய்வெளிப்பட்டிவைபடைத்தான்பின்னும்
மொய்கொள்சோதியோடாயினுனொருமூவராகியமூர்த்தியே"

என்ற இதில் பகவத்விஷய ஜ்ஞாநத்தை உபதேசித்தார். பின் ததீயரே எல்லா ப்ரகாரத்தாலும் உத்தேசியராவாரென்று பாராட்டிப் பேசவந்த விடத்தில்;

"பயிலும்பிறப்பிடைதோறெம்மையாளுடையார்களே" என்றும்,
"எம்மையாளுடைநாதரே" என்றும்,
"எமக்கெம்பெருமக்களே" என்றும்,
"நம்மையளிக்கும்பிராக்களே" என்றும்,
"சன்மசன்மாந்தரம்காப்பாரே" என்றும்,
"எம்மைநாளுய்யக்கொள்கின்றநம்பரே" என்றும்,
"எம்தொழுகுலந்தாங்களே" என்றும்,

"அடியாரடியார்தம்மடியாரடியார்தமக்
கடியாரடியார்தம்மடியாரடியோங்களே"

என்றும் அருளிச்செய்து பல சுருதியில்,

"அடியோங்குநூற்றுவர்வீயவன்றைவர்க்கருள்செய்த
நெடியோனைத்தென்குருகூர்ச்சடகோபன்குற்றேவல்கள்
அடியார்ந்தவாயிரத்துள்ளிவைபத்தவன்றொண்டர்மேல்
முடிவாரக்கற்கிற்கிற்சன்மஞ்செய்யாமைமுடியுமே"

என்றருளிச்செய்தார். இதில் "அவன் தொண்டர்மேல் முடிவு ஆரக் கற்கிற்கிற்சன்மம் செய்யாமை முடியுமே" என்றதனால், ததீய விஷயமான இத் திருவாய்மொழியை நெஞ்சிற் பதியும்படி கற்று அநுஷ்

டிக்க வல்லவர்கள் விரோதி நீங்கப்பெற்றுப் பேற்றைத் தவறாதடை வார்கள்; என்று குறிக்கப்பட்டுளது. இதனால் ப்ரதமாவதியென்று சொல்லப்படும் பகவத்விஷயத்தளவில் நிலைநின்றவர்கட்குப் பேற்றில் ஸம்சயமுண்டென்பதும், சரமாவதியான ததீய விஷயத்தில் நிலைன்ற வர்களுக்கு அந்த ஸம்சயமில்லையென்பதும் பெறப்பட்டன. இன் னும் ஆழ்வார் ததீய சேஷத்வமே ஆத்மாவுக்கு நிலைநின்ற புரு ஷார்த்தமென்று உறுதிப்படுத்துவதற்கு,

"நெடுமாற்கடிமைசெய்வேன்போலவனைக்கருதவஞ்சித்துத்
தடுமாற்றற்றதீக்கதிகள்முற்றுந்தவிர்ந்தசதிர்நினைந்தால்
கொடுமாவினையேனவனடியாரடியேகூடுமிதுவல்லால்
விடுமாறென்பதென்னந்தோவியன்மூவுலகுபெறினுமே"

என்று அருளிச்செய்தார். இந்த "நெடுமாற்கடிமை" என்ற திரு வாய்மொழி முழுவதும், உலகத்தில் ஐசுவர்யமும், ஆத்மமோக்ஷ மும், ஈசுவர சேஷத்வமும், ஈசுவரானுபவமும் புருஷார்த்தங்களா கப் பற்றியிருப்பார்கள். இப்படிப்பட்ட புருஷார்த்தமெல்லாம் நான் பற்றின பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்தோடு ஒப்பாகாது என்று எடுத்துக் கழிப்பதற்கும் போராது. "இப்படியிருக்கிற இது காலதத்வமுள்ளதனையும் எனக்கும், என்னோடு சம்பந்தமுடையார்க் கும் வாய்க்கவேண்டும்" என்று ஆழ்வார் பிரார்த்தித்துக் கொள்வ தாகக் கூறும்.

இன்னும், திருக்கச்சிநம்பிகளின் ஸ்ரீபாதரேணுவைச் சிரஸாக வஹித்து வந்தனை வழிபாடுகள் செய்துவந்த ஒரு பாகவதர் ஒருநாள் திருக்கச்சிநம்பிகளைக் கண்டு 'அடியேன் நித்யவிபூதியிற் சென்று நித்யஸூரிகளோடு கலந்து எம்பெருமானை அநுபவிக்க விரும்பு கிறேன். அப்பேறு ஸித்திக்குங்காலம் எப்பொழுதென்பதைப் பேரருளாளரைக் கேட்டு ஸாதித்தருளவேண்டும் என்று பிரார்த்தித் தார். அவரும் பேரருளாளரிடத்தில் விண்ணப்பிக்கப் பேரருளாளர் இன்ன காலமென்று குறிப்பித்தருளினார். திருக்கச்சிநம்பி இவ்விஷ யத்தை அந்தப் பாகவதருக் கருளிச்செய்ய அவருங்கேட்டு ஆநந்தித் தார். பின்பொருநாள் திருக்கச்சிநம்பிகள் பேரருளாளப்பெருமா ளிடத்தில் தேவரீருடைய தெளிவிசும்பாகிய திருநாட்டிற்குச்சென்று அடியேன் கைங்கர்யஞ் செய்யும் காலத்தைக் குறித்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தார். அப்பொழுது பேரருளாளர் 'நீர் பாகவ தாபிமானம் பெறாததால் அது உமக்கில்லை' என்றார். அதன்பின்

திருக்கச்சிநம்பிகள், பெரியநம்பிகளிடத்தில் வந்து பல குற்றேவல்கள் செய்து அவர் அபிமானம் பெற்றுச் சென்றார். இதனாலும் ததீய சேஷத்வத்தின் சீர்மை அறியலாம்.

முதலியாண்டானும் இந்தத் ததீயசேஷத்வத்தின் பெருமை எல்லாம் திருவுள்ளம்பற்றியே "பாகவத சேஷத்வ விதுரமான பக வச்சேஷத்வமும் தேகாத்மாபிமானத்தோடொக்கும்" என்று அருளிச் செய்தார்.

ஸ்ரீ:

கோயமுத்தூர் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸபையின்

வருஷோத்ஸவ உபந்யாஸ ஸங்க்ரஹம்.

[இது, கோயமுத்தூர் G. நாராயணதாஸரால் எழுதப்பட்டது.]

இந்த ஸபை, கோயமுத்தூர் பெரியகடைவீதி ஸ்ரீ லக்ஷ்மீநாராயண வேணுகோபாலஸ்வாமி வாகன மண்டபத்தில் ஸ்தாபிக்கப் பெற்றுளது.

1925ஹு செப்டம்பர்மீ 6உயன்று இச்சபையின் வருஷோத்ஸவம் கோயமுத்தூர்ப் பெரியகடைவீதி முனிஸிபல் ஸ்கூலில் ஸ்ரீ. உப. வே. P. N. கிருஷ்ணையங்கார் ஸ்வாமியின் (B. A. B. L. ஹைக்கோர்ட்டு வக்கீல்) அக்கிராஸநாதிபத்தியத்தில் நடைபெற்றது. ஸபைத்தொடக்கத்தில் மங்களவாழ்த்துக் கூறப்பட்டது. அதன் பின் முனிஸிபல் சேர்மனும், ஸபையின் கார்யதர்சியுமாகிய ஸ்ரீமாந் சுண்ணுச்சாமிக் கவுண்டரவர்களால் (B. A. B. L. வக்கீல்) ஸபையின் வருஷாந்த அறிக்கை வாசிக்கலாயிற்று. அதில், இந்தச் சபைக்குச் சில மெம்பர்களும், அபிமானிகளு மிருக்கின்றார்களென்றும், இது 1923ஹு ஆகஸ்டுமீ 26உயில் தொடங்கப்பெற்றதென்றும், பிரதி சனி, ஞாயிறு தினங்களில் சுண்டப்பாளையம் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் திவ்யப்ரபந்த காலக்ஷேபம் நடத்தப்பெற்று

வருகிறதென்றும், ஸ்ரீமாந் கிருஷ்ணராமாநுஜ தாஸரென்பவர் தம் கார்யங்களையும் பொருட்படுத்தாமல் இச்சபை ஆரம்பகாலந்தொட்டு இது விர்த்தியடையும் வழியை நாடுவதே தமக்குற்றபணியாக மேற் கொண்டுவந்தாரென்றும், இவருக்கு நன்றிபாராட்ட இச்சபை கடமைப்பட்டுளதென்றும், இதுவரை வரவு செலவு இவ்வளவென்றும், இன்னும் எல்லாரும் இச் சபையின் மெம்பர்களாகவும், அபிமானிகளாகவும் சேர்ந்து இதை ஆதரித்து வரவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

6—9—25 காலை 9-15 மணிமுதல் 10-15 மணிவரை சுண்டப்பாளையம் ஸ்ரீ.உப.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் 'அர்ச்சாவதாரம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. அப்பொழுது, ஸர்வேசுவரனுக்கு பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்ற ஐந்து நிலைகள் உண்டு. அவற்றுள்ளும் அர்ச்சாவதார எம்பெருமான் தேசகாலவிபாகமின்றி எல்லாக் காலத்திலும் எல்லோருக்கும் முகங் கொடுத்துக்கொண்டு விளங்குகின்றுைதலால் இந்த அர்ச்சாவதாரத்தில் "இருட்டறையில் விளக்குப்போல" ஸௌலப்ய குண முதலிய எல்லாக் குணங்களும் நிறைந்து விளங்குகின்றன. இந்த அவதார விசேஷத்தை சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்கள் பாராட்டிப் பேசுகின்றன. ஆழ்வார்களும் பாராட்டி ப்ரபத்தி செய்தார்கள். "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று, மண்டினார்க் குய்யலல்லால் மற்றையோர்க் குய்பலாமே" என்று இதன் பெருமைதோன்ற இவ் வெம்பெருமான் விஷயத்தில் ஈடுபட்டார்க்கு உஜ்ஜீவனமுண்டு அல்லார்க்கில்லையென்று உடன்பாட்டுமுகத்தாலும், எதிர்மறை முகத்தாலும் அருளிச் செய்தார்கள்; என்ற இவை போன்ற பல விஷயங்கள் பல ஹேதுக்கள்காட்டி விளக்கப்பட்டன.

10-15 மணிமுதல் 11 மணிவரை கோயமுத்தூர் *ஸ்ரீ. உப. வே. வேதவியாசப்பட்டர்ஸ்வாமியால் 'அர்த்தபஞ்சகம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. அக்காலத்தில், அர்த்தபஞ்சகமாவன:-

*இந்த ஸ்வாமி கனமடை தேவஸ்தானம் தீர்த்தக்காரர்; பட்டர் திருவம்சத்தைச் சேர்ந்தவர்; இந்த ஸ்வாமிக்குக் கோயமுத்தூரிலும், சுற்றூர்களிலும் பல சிஷ்யர்கள் உண்டு.

ஆத்ம ஸ்வரூபம், பரமாத்ம ஸ்வரூபம், புருஷார்த்த ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபங்களாம். இவற்றைக் குறித்தே வேத வேதாந்தங்களும், அவை அறிந்த பெரியோர்களும் உரைத்துச் சென்றார்கள். ஆதலால் இந்த அர்த்தபஞ்சகத்தை ஸகலவேத ஸாரம் என்று வழங்குவதுண்டு. என்ற இவைபோன்ற பல விஷயங்கள் யாவருமுணரும்படி தெளிவாக எடுத்துரைக்கலாயின.

மாலை 2-30 மணிமுதல் 4 மணிவரை கோயமுத்தூர் ஸ்ரீ. உப. வே. V. R. ஸ்ரீசைலசக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமியால் (B. A. வக்கீல் ஆசார்ய வம்சத்தைச்சேர்ந்தவர்) 'ஈசுவரதத்வம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. அதுசமயம், ஈசுவரதத்வமாவது:- ஸமஸ்த ஐசுவர்யங்களையுடைய ஸர்வேசுவரனது உண்மைநிலையாம். ஈசுவர சப்தவாச்யனுவான் ஸ்ரீமந்நாராயணனே. இவனையே உபாயோபேய மாகப்பற்றி யடைவதே பரம புருஷார்த்தமாகும். மற்றத் தெய்வங்களைப் பரதேவதையாகக் கொண்டொழுகுதல் புருஷார்த்தமாக மாட்டா. இதற்கு 'கபாலநன்மோக்ஷத்து விருத்தாந்தம்' 'பாணாசுர விருத்தாந்தம்' 'விருத்திராசுர விருத்தாந்தம்களும்' பொருந்திய தக்க ப்ரமாணங்கள் பலவும் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டன.

4 மணிமுதல் 4-30 மணிவரை ஸ்ரீமாந் கிருஷ்ணராமாநுஜதாஸரால் 'ஸ்ரீவைஷ்ணவதத்வம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. அப்பொழுது, ஸ்ரீவைஷ்ணவதத்வமாவது:- விஷ்ணு ஸம்பந்தமுடைய சமயத்தின் உண்மையாம். இந்த சமயம் அநாதிஸித்தமாயுள்ளதே. இதற்குப் பிரவர்த்தகாசார்யர்களாய் விளங்கியவர்கள் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும், நாதமுனிகள் முதலிய ஆசார்யர்களுமாவார்கள். இவர்களுள் ஸ்ரீ ராமாநுஜாசார்யராலே இந்தச் சமயம் நாடெங்கும் பரவப்பெற்றது. எப்பொழுதும் இன்பமுற்று வாழக் கருதியவரெல்லாம் இச்சமயச் சார்பினராய் ஒழுகவேண்டும். என்ற இவைபோன்ற சில விஷயங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கப்பட்டன.

அதன்பிறகு, அக்ராஸநாதிபதியவர்கள் முன் உபந்யஸிக்கப்பட்ட உபந்யாஸ விஷயங்களின் ஸாராம்சங்களை ஸபை வியக்கும்படி உபந்யஸித்து முடித்துப்பின் ஸபையோர்களை நோக்கி நீங்களெல்லீரும் இந்த ஸபைக்குச் சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரித்து வர வேண்டும். யானும் இந்தச் சபையிற் சேர்ந்து இது விர்த்தியடைதற்

குரிய உதவிசெய்து வருவேன். ஸர்வசக்தனான ஸர்வேசுவரன் திருவருளால் இந்தச் சபை மேன்மேலும் விர்த்தியடைவதாக; என்று மங்களாசாஸநஞ் செய்தார்.

ஸபையின் கார்யதரிசி, அக்ராஸநாதிபதிக்கும் உபந்யாஸகர்களுக்கும், ஸபையோர்களுக்கும் வந்தனங்கூற மங்களவாழ்த்துடன் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று ஸபை பூர்த்திபெற்றது.

ஸ்ரீ:

நன்கொடை.

இக்காலத்தில், லோகவ்யவஹாரத்தைப்பற்றிய பல பத்திரிகைகளும், வைதிக ஸம்பந்தமான சில பத்திரிகைகளும் நிறைந்த (பண்டு) நிதிகளைப்பெற்று நடைபெறுகின்றன. நமது ஹரிஸமய திவாகரமும் அந்த நிலைமைக்கு வரவேண்டுமென்ற நோக்கம் நமக்குப் பெரிதுமுண்டு. இதைக்குறித்து முன்பு நமது திவாகரத்தில் ஒரு வேண்டுகோள் வெளியிட்டுமிருக்கிறோம். அதற்கிசைந்த சில தார்மிகர்கள் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்தார்கள். அவர்கள் நாமதேயங்கள் இவ்விரண்டாந் தொகுதியின் நான்காம்பகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பொழுதும், ஸ்ரீரங்கம் ஸ்ரீமாந் ஆளவந்தார் ராமாநுஜதாஸரவர்கள் ஸம்ரக்ஷகராகச்சேர்ந்து ரூபா 100ம், திருச்சிராப்பள்ளி முனிஸிபல்கவுன்சிலரும், டிஸ்டிரிக்ட்டுபோர்டு மெம்பருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ சு. வேங்கடசுப்புசெட்டியாரவர்களும், திருச்சிராப்பள்ளி வயிர வியாபாரம், மகா-ள-ள-ஸ்ரீ பெ. ரா. குப்புஸாமி செட்டியாரவர்களும் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்து ஒவ்வொருவரும் ரூபா 25ம் கொடுத்து உபகரித்தார்கள். இக்காலத்தில் உத்தமவிஷயமறிந்து பொருளை விநியோகிப்பார் மிகச்சிலரே. இங்ஙனமிருக்க இவர்களின் பேருபகாரம் பெரிதும் பாராட்டத்தக்கதே. இவர்களுக்கு நம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

இது நிற்க, மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு ஜீவித சந்தாதார்கள் பொருளுதவி புரியும்படி செய்தவரும், இன்னும் பல ஜீவித சந்தாதார்களும், சாதாரண சந்தாதார்களும் சேர்த்துத் தருவதாய் வாக்களித்து அங்ஙனமே கார்யஞ்செய்து வருபவருமாகிய ஸ்ரீரங்கம் ஸ்ரீமாந் சோ. சு. நாகமணி செட்டியாரவர்களுக்கும் எம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். இதுபோல் பலரும் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்து உதவி செய்யுமாறு மீண்டும் ஒருமுறை வேண்டுகிறோம்.

ப. — அ.

வடிவுஞ்சிறக்கவந்து
சபையின்கணிற்றல்கண்டு
மயல்[1]கொண்டுநத்துமெங்கள் பெருமாளே.

[குறிப்பு:— விதி-பிரமன். உருக்கொடு-உருவங்கொண்டு. படைத்தல்-சிருஷ்டித்தல். இந்த்ரன்மிகுநண்புபற்றுதம்பி-உபேந்திரன். விரகின்-உபாயத்தால். புரத்தல்-பாதுகாத்தல். விரகிற்புரப்பை யென்பது 'விரகின்புரப்பை' எனச் சந்தநோக்கிநின்றது. கங்கைமுடிகொண்டபித்தன்-சிவன். முடி-தலை. மிடல்-வலி. கதி-போக்கு, செலவு. சொருபம்-ஸ்வரூபம். தெரிப்பதன்று-தெரிவிக்கமுடியாதது. ககனம்-ஆகாயமாகிய. சனகன்பதி-மிதிலை. ரவிதன்குலத்துயர்ந்த நரபாலன்-தசரதன். எழில்-அழகு. அனுங்குமிடை-வருந்துமிடை. மயல்-ஆசை. நத்துதல்-விரும்புதல்.]

48. பவளத்துவர்வாய்மகளிர்
வசனத்தினிலேவதனப்
பதுமத்தினிலேமருவி விளையாடும்

பரிசத்தினிலேகலக
நயனத்தினிலேவிணைசெய்
பகரத்தினிலேயொழுகி வசமாகி

பவலத்தினிலேபொழுது
கழியப்பொருள்போய்வறுமை
யடையப்பழியேபெருக வவரோடே

யளவற்றிடுமோகனமொ
டொருமித்திடுபாவீனையு
மடிமைக்கொளவேநினைதல் புரிவாயோ

இவனுக்கிவளேமனைவி
யிவளுக்கிவனேபதியு
மெனவுட்கருதாவரசர் மறைவாண

ரிவரிப்படியேமொழிய
வவையிற்கொடிபோன்மதுர
மெழுசொற்கிளிபோல்விரவு மொருசீதை

1. கொண்டநற்றெய்வங்கள்.

கவளக்கரியோவலதெ
னுயிருக்குயிரோகரிய
கடவுட்சுடரோவெனவு ணிறைசோரக்

கவலைப்படுமர்மனதின்
மயலிட்டஙனேயுருகு
கருணைக்கடலேபெரிய பெருமாளே.

[குறிப்பு:— துவர்-செந்நிறம். வதனப்பதுமம்-முகத்தாமரைமலர். நயனம்-கண். பகரம்-ப்ரகாசம். அவலம்-மனக்கவலை. மோகனம்-மயக்கம். ஒருமித்திடுதல்-ஒன்றுபடுதல். பதி-கணவன். உட்கருதா-மனத்தில் எண்ணி. மறைவாணர்-பிராமணர். அவை-ஸபை. மதுரம்-இனிமை. நிறை-கற்பு. மயல்-மயக்கம். அங்ஙனே-சீதாபிராட்டியைப்போலவே.]

49, வர்ணிமலரோனையன்புகொண்ட
தேவியபிராமியந்திசந்தி
மாமறைவலோர்வணங்கநின்ற முதலாளி

மாயையதிருபிதிங்கடங்கு
வேணியுடையான்ப்ரபஞ்சமெங்கும்
வாய்மைபலவாறுகொண்டியம்ப வருண்மாது

பாணியொருநாலுடன்பொலிந்து
தாவளியமாய்விளங்குமங்கை
பாரதியெனுவில்வந்திருந்து விளையாடப்

பார்முழுதுநீயளந்தெழுந்த
தாண்[1]மிசையிலேவிளங்குகின்ற
பாடல்கொடுபாடியன்பர்பந்தி யடைவேனோ

கார்ணவிடியாதுகங்குல்கங்குல்
பேணமுடியாதுசங்குசங்கு
காதலறியார்கள்பெண்கள்பெண்க [2]ளனலாகக்

காயுமினிவீறுதிங்கடிங்கள்
சாலவதிபாவிதென்றறென்றல்
காமன்வருவீதியெங்குமெங்கு நிலைகாணேன்

1. முடியின்மேவியின்சொல்விஞ்சு. 2. ளனலாகிக்.

நாணிசிலை தூணிகொண்டுகொண்டு
தூரவொருமேகநின்றுநின்றெ
ணுமுடனுவியுண்டதுண்ட தெனமாழ்கி

நாடுமொருசீதைதயங்கிரங்க
வாயவளின்மோகம்விஞ்சவிஞ்ச
நாளைமணமாகுமென்றிருந்த பெருமாளே.

[குறிப்பு:-வாணி, அபிராமி, பாரதி என்பன கலைமகள் பெயர். மலரோன்-பிரமன். முதலாளி-முதன்மையுடையாள். அதிரூபி-மிக்க அழகுடையாள். திங்கள் தங்கு வேணியுடையான் ப்ரபஞ்சமெங்கும் வாய்மை பலவாறு கொண்டியம்ப அருள் மாது-சந்திரன்பொருந்திய ஜடையையுடைய சிவபிரான், உலக முழுவதும் தத்துவார்த்தத்தைப் பலவழியாலும் உபதேசிக்கும்படி அருள் செய்தவள். பாணி-கை. பொலிந்து-சிறந்து. தாவளியம்-வெண்மை. பந்தி-வரிசை. கங்குல்கங்குல் முதலியன அடுக்கு. கங்குல்-இரவு. சங்கு-வளை. பெண்கள்-தோழிகள். வீறுதிங்கள்-பெருமையுள்ள சந்திரன். சிலை-வில். தூணி-அம்புக்கூடு. மாழ்கி-மயங்கி. அவளின்-சீதையைக்காட்டிலும். விஞ்ச-அதிகப்பட. மணம்-கல்யாணம். காணவிடியாது என்பது முதல், ஆவியுண்டது என்பது வரை சீதை கூற்று.]

50. வாரமொடுபேசுநண்புபண்பு
திரநிலையாண்மைநன்றிவென்றி
வாய்மைசதுர்மேன்மைதஞ்சமின்சொல் வலிநேயம்

வாசிகொடைபாரமண்பொழுங்கு
பேரறிவுதேசுநன்குணங்கள்
வாழ்வுபலநூல்விளங்கல்மந்த்ர நெறிநீதி

காரியவிசாரநம்புசிந்தை
[1]வீறுகிளையோதனந்தனங்கள்
காமரதிரூபம்வம்சமிந்த நலம்யாவுங்

காசினியினீயொழிந்துபின்பு
வேறுடையர்யாவரென்றிரந்து
காவலரையேபுகழ்ந்துவம்பி லுழல்வேனோ

1. வீறுகிளையோர்கணந்தவங்கள்.

மேருகிரிபாரகொங்கைகொங்கை
காலன்விடுதூதுகண்கள்கண்கள்
மேகமவர்பாரகொண்டைகொண்டை யவர்தாமோ

வேரிமலர்மேவுமங்கைமங்கை
யாரநகைமாரசிங்கிசிங்கி
மீளநினையாதுசென்றசென்ற நடைதானென்

னுருயிரையீருகின்றதின்று
யாதுமவர்கோலம்வஞ்சம்வஞ்ச
மாரழலைவீசுதென்றல்கொன்று விடுமானு

ராசையெனதாசையென்றுநின்று
சீதைதிருமேனிகண்டவன்று
ளாதரவினேரறிந்துகொண்ட பெருமாளே.

[குறிப்பு:-வாரமொடுபேசுநண்பு-அன்போடுபேசுகின்ற நட்பு. பண்பு-எல்லாரியல்புகளும் அறிந்தொழுகுதல். தீரம்-மனத்தைரியம். ஆண்மை-ஆளுந்தன்மை. வென்றி-வெற்றி. வாய்மை-சத்தியம். சதுர்-சாமர்த்தியம். தஞ்சம்-ஸௌலப்யம். வலி-பராக்ரமம். நேயம்-ஸ்நேஹம். வாசி-இலாபம். பாரம்-பொறுமை. தேசு-காந்தி. பலநூல் விளங்கல்-பலநூலினையும் அறிதல். மந்த்ரநெறி-மந்த்ராலோசனைமுறை. காரிய விசாரம் - செய்யத்தக்கவற்றை யாராய்தல். சிந்தை-மனம். வீறுகிளை-மிக்கசுற்றம். ஓதனம்-உணவு. தனங்கள்-பொருள்கள். காமர் அதிரூபம்-ஒளியுள்ள மிக்கவடிவு. வம்சம்-குலம். காசினி-பூமி. இரந்து-யாசித்து. காவலர்-அரசர். உழலுதல்-வருந்துதல். பாரகொங்கை மேருகிரி, கண்கள் காலன்விடுதூது, அவர் பாரகொண்டை மேகம் எனக் கூட்டுக. கொங்கைகொங்கை என்பது முதலியவை அடுக்கு. மேருகிரி-மேருமலை. பாரகொங்கை-பருத்த தனம். காலன்-யமன். அவர்-சீதாபிராட்டி. கொண்டை-கூந்தல். வேரி-வாசனை. மலர்மேவுமங்கை-லக்ஷ்மி. ஆரநகை-முத்துப்போன்ற பற்கள். மாரசிங்கி-மதனபாஷாணம். ஆருயிரை-பெறுதற்கரிய உயிரை. ஈருதல்-பிளத்தல். அவர் கோலம் யாதும் வஞ்சம் எனக் கூட்டுக. ஆரழலை-மிக்க வெம்மையை. மானுர்-மான்போன்ற சீதாபிராட்டி. மானுராசை யெனதாசையென்று-பிராட்டியின் ஆசை என் விஷயமான ஆசையென்று. உள் ஆதரவினேர்-சீதாபிராட்டியின் மனத்திலுள்ள விருப்பத்தின் நேர்மையை. 'மேருகிரி பாரகொங்கை' என்பதுமுதல் 'மானுராசை எனதாசை' என்பதுவரை சக்ரவர்த்தி திருமகன்கூற்று.]

51. நகுமுத்துமாலைகட்டு
முலைவெற்புமாகிமற்றை
நடுவற்பமாயிளைத்து வளர்ந்தாளும்

நலமுற்றுநாணமச்ச
மடமுட்கொளாவிருப்பு
நயனத்தினாலுரைக்கு மிதுகாலம்

அகிலத்திலாரிவட்கு
மணமுற்றுவாரெனத்த
மகமுற்றபேருரைப்ப ரிறைவாநீ

அதுபற்றெனாவொருத்தி
வரைவைக்கடாவன்மற்று
மசடர்க்குநானுரைத்து மெலிவேனோ

மகிமைப்ரதாபமிக்க
மிதிலைப்பிரானுனக்கென்
மகள்பத்நியாமெனத்தண் அளியோடே

மறையிற்ப்ரகாரம்விட்ட
புனல்கைக்கொளாமகிழ்ச்சி
மனமொத்ததோர்[1]முழுத்தம் வழுவாதே

தகைபெற்றவேள்விமுற்றி
முனிவர்க்கெலாமிகுத்த
தன்முற்றுமேயிறைத்து முறையாலே

சரியுற்றபாணிபற்றி
யனல்சுற்றிபாதரித்த
சனகிக்குமாலையிட்ட பெருமாளே.

[குறிப்பு:-நகு-விளங்குகின்ற. வெற்பு-மலை. நடு-இடை. விருப்பு-ஆசையை. நயனத்தினால்-கண்ணால். உரைக்கும்-சொல்லுகின்ற. இதுகாலம்-இக்காலம். அகிலம்-பூமி. மணமுற்றுதல்-மணஞ்செய்தல். அகமுற்றபேர்-(தலைவியின்)

1. முகுர்த்தம்.

வீட்டிலுள்ளார். 'இறைவா நீ அதுபற்று' என்பது தோழிகூற்று. அது-மணம். ஒருத்தி-தோழி. வரைவைக் கடாதல்-வரைவுகடாவுதல்; தலைவியை நான் முறைப்படி நாடறிய மணந்துகொள்ளும்படி களவொழுக்கத்திலுள்ள தலைவனைத் தோழி வேண்டுவது; இது, அகப்பொருட்டுறைகளுள் ஒன்று. மகிமை ப்ரதாபம்-பெருமையான வீரம். மிதிலைப்பிரான்-ஜனகன். 'உனக்கு என்மகள் பத்நியாம்' என்பது ஜனகன் இராமனை நோக்கிக் கூறியகூற்று. பத்நி-மனைவி. தண்ணளி-க்ருபை. 'மறையின் ப்ரகாரம்' என்பது சந்தநோக்கி 'மறையிற் ப்ரகாரம்' என விகாரமாயிற்று. மறையின் ப்ரகாரம்-வேதவிதிப்படி. புனல்-நீர். மகிழ்ச்சி மனமொத்ததோர்முழுத்தம் வழுவாது-மனமகிழ்ச்சி பொருந்திய சிறந்த முஹூர்த்தம் தவறாமல். தகை-பெருமை. வேள்வி-மணவினை. முற்றி-முடித்து. சரி-வளை. அனல்சுற்றி-அக்னியை வலம்வந்து. ஆதரித்த-விரும்பிய. சனகிக்கு-ஜானகிக்கு.]

52. வள்ளியிடைப்பொற் றுகிலினைநீக்குவ
ருள்ளிலொதுக்கித் தனகிரிகாட்டுவர்
மௌவன்முடித்துத் தெருவிலுலாத்துவர் விழியாலே

மையல்விளைத்துப் பரிபவமாக்குவர்
கையிலகப்பட் டவர்களைமேற்கொடு
வல்லவிசித்ரக் கலவியின்மூட்டுவ ரொழியாதே

யுள்ளபொருட்பற் றுவர்பினையோட்டுவர்
தள்ளியபிற்றைப் [1]பொழுதினிலேப்பவர்
உள்ளமொருத்தர்க் கறமுழுதோட்டுவர் இவரோடே

ஒல்லுமனத்து ப்ரமையுடையேற்கினி
யல்லலறுத்துக் கொடியபராக்கற
வுப்பவழைத்துத் திருவடிகாட்டுவ தொருநாளே

எள்ளவில்கொற்றத் தசரதனுர்க்கினி
துள்ளமுவப்பக் [2]கிளையிறுமாப்புற
வெல்வளைமைக்கட் கவுசலைவாழ்த்திட வறவோர்நின்

றெல்லையில்வர்க்கச் சுருதிகள்கூப்பட
நல்லமரர்க்குத் துயரதுகீழ்ப்பட
வில்லிடைவைத்துச் சனகனுநோக்குற முனிகாண

1. பொழுதினணுப்புவர். 2. கிளி. 3. நீடெல்லை.

வெள்ளைமருப்புக் கரியுரிபோர்த்தவன்
வல்லசுரர்க்குப் புகலெனுமாப்புர
மெள்ள நுதற்கட் பொறியினின்மூட்டுறு தழன்மூள

வெவ்வரவைச்சிக் கெனவதின்மாட்டியொ
4ரொள்ளியநெட்டைக் கணையதுபூட்டிய
வில்லைமுறித்துச் சனகியைவேட்டருள் பெருமாளே.

[குறிப்பு:-வள்ளியிடை-வள்ளிக்கொடிபோலும் இடை. துகில்-வஸ்திரம். தனகிரி-தனமலை. மௌவல்-முல்லைப்பூ. பரிபவம்-அவமானம். மேற்கொடு-மேலேகொண்டு. பிற்றைப்பொழுது-மறுநாள். உள்ளம்-மனம். உள்ளம் ஒருத்தர்க்கு முழுதும் அற ஒட்டுவர்-ஒருவரிடத்தே மனம் முழுதும் பதிந்துகிடக்க வேறொருவரிடத்தே (அன்புடையவர்போல)நெருங்குவர். ஒல்லும்-இணங்கிய. மனத்துப்ரமை-மனமயக்கம். அல்லல்-துன்பம். அறுத்து-போக்கி. பராக்கற-(உன்விஷயத்தில் மனதைச் செலுத்தாத) உபேக்ஷைநீங்க. உய்ய-உஜ்ஜீவிக்கும்படி. எள்ளல் இல்-பழிப்பில்லாத. கொற்றம்-வெற்றி. கிளை-சுற்றத்தார். இறுமாப்புற-மிக்க மகிழ்ச்சியடைய. எல்வளை-ஒளிபொருந்தியவளை. மைக்கண்-கரியகண், மைதீட்டப்பெற்றகண்ணுமாம். அறவோர்-பிராமணர். எல்லையில் வர்க்கச்சுருதிகள் கூப்பட-கணக்கற்ற கிளைகளையுடைய வேதங்களைக் கோஷிக்க. அமரர்-தேவர். துயர்-துன்பம். கீழ்ப்பட-தணிய. சனகனும் இல்லிடைவைத்து நோக்குற எண்க்கூட்டுகெ. இல்-மாளிகை. முனி-விசுவாமித்திரன் வெள்ளைமருப்புக் கரியுரிபோர்த்தவன்-வெள்ளிய கொம்பினையுடைய யானைத் தோலைப்போர்த்த சிவன். வல்லசுரர்-கொடிய அசுரர். புகல்-புகுமிடம். மாப்புரம்-பெரிய திரிபுரத்தின்கண். நுதற்கட்பொறி-நெற்றிக்கண்ணினின் றுண்டான தீப்பொறி. மூள-அதிகப்பட. வெவ்வரவு-கொடிய வாசுகியென்னும் பாம்பை. சிக்கென-உறுதியாக. மாட்டி-நாணகப் பூட்டி. ஓர் ஒள்ளிய நெட்டைக் கணை-ஒப்பற்ற விளக்கம் மிக்க நீண்ட பாணத்தை. வேட்டருள்-மணந்து கொண்ட. சிவதனுஸாதலின், 'வெவ்வரவைச் சிக்கென வதின்மாட்டி யொரொள்ளிய நெட்டைக்கணையதுபூட்டிய வில்' என அதற்கேற்ற அடைகொடுத்துக் கூறினர்.]

53. கனகசித்திரகூடம்வைகுந்தவிண்
ணகரிபுட்குழிநாகைபுளிங்குடி
கடன்மலைப்பதிசீவரமங்கைவெ ளறைமூழிக்

4. ரொள்ளொரிநட்புக்கணை.

களம்வெளக்குளமாண்தகுறுங்குடி
யுயர்கவித்தலமாலிகணங்குடி
கருதலுற்றதுவாரகைமுந்துய முனேகோவர்த்

தனமிசைக்கள்வனூர்வெளியங்குடி
புருடவுத்தமமூரகநன்பதி
தடவயற்பாமேசுரமுந்திய பரிசாரங்

தகுதிருப்பெயர்சேறைநரன்பளி
யினியமுட்டமெனுவுலகங்தொழு
தலமனேத்தினுநீயுறையும்புகழ் பரவேவிணு

அனுசருத்தமர்மூவருமுந்திய
சனகனுக்கிளேயானருண்மங்கையர்
அதிகுணத்தொருமூவரையுங்கனல் கரியாக

அவர்தனித்தனியாகமணந்திட
ஒருவகைக்கலியாணமெனும்படி
யடைவினிற்றவிராதுநடந்தபின் இளேயாரோ

டினியபுத்திரிஞலயன்மைந்தனே
வரிசையைத்தருகாதிதன்மைந்தனே
இறைவனேப்பெறுதாயரைவந்தனே புரியாவங்

திசைபுலப்படவானகதுந்துபி
யதிரமெய்த்தவராசிமொழிந்திட
விலகுபொற்றிருமாதுடனின்புறு பெருமாளே.

[குறிப்பு:-சித்திரகூடம் என்பது முதல் முட்டம் என்பது வரை ஸர்வேசுவரன் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள திவ்யதேசங்கள் கூறப்படுகின்றன. கனகசித்திரகூடம்-பொன்மயமான தில்லேநகர்த் திருச்சித்திரகூடம். வைகுந்த விண்ணகரம், சோழநாட்டுள் காவிரியின் வடகரையிலுள்ளது. நாகை-திருநாகை; இது காவிரியின் றென்கரையி லுள்ளது. புளிங்குடி-பாண்டிநாட்டுள்ளது. கடன்மலேப்பதி-திருக்கடன்மல்லே; இது மாவலிபுரம் எனவும் வழங்கப்படும்; தொண்டைநாட்டுள்ளது. சீவரமங்கை-வானமாமலே. வெளறை-திருவெள்ளறை. திருமூழிக்களம்-மலேநாட்டுள்ளது. வெளக்குளம்-திருவெள்ளக்குளம்; இது காவிரியின் வடகரையிலுள்ளது. ஆதை-ஆதனூர். இது காவிரியின்